சிறு தானிய வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் பயிரிட தேவையான உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை மலிவு விலையில் வழங்குவதற்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. சிறு விவசாயிகளுக்கு உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் நிர்ணயத்த விலையில் 25 சதவீதம் மானியமாகவும், மிகச் சிறிய விவசாயிகளுக்கு 33 1/3 சதவீதம் மானியமாகவும் அரசு நிதி உதவி செய்துள்ளது. இந்த மானியமானது ரொக்கத்திற்கும் கடனுக்கும் வறட்சிப் பகுதியில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(இ) தென்னார்க்காடு மாவட்டத்தில் இத்திட்டத்திற்கு 37·63 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) இத் திட்டம் சென்னை, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படுகிறது.

(முற்பகல் 9.30)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: சென்ற ஆண்டு அநேகமாக எல்லா மாவட்டங்களும் வறட்சியானவை என்ற முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதர மாவட்டங்களில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு எவ்வளவு செலவிடப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது ஒரு நீண்ட பட்டியல். பெரியார், சேலம், தர்மபுரி, வட ஆற்காடு. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட பட்டியலாக இருக்குமானால் அறிக்கையாக வைக்கலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மொத்தம் 304 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி விவர அறிக்கையை வேண்டுமானால் அவை முன் வைக்கலாம்.

Funds for Maintenane of National High ways.

*Q. No. 310— THIRU G. VISWANATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether funds are allotted by the union government for the maintenance and extension of National high ways in the State in proportion to the length of the roads; and

(b) if not, the action taken in the matter,

1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்காக மாநிலத்தி லுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் நீளத்திற்குத் தக்கவாறு மத்திய அரசால் நிதி ஒதுக்கப்படுகின்றது. இருப்பினும் தேசிய நெடுஞ்சாலைகளை நீட்டிப்பது என்பது ஒரு பெரிய கொள்கை யாகும். தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு உயர்த்தக் கருதும் சாலையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து அச்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது முடிவு செய்யப்படுகின்றது.

திரு. செ. சிவசாமி : கிழக்குக் கடற்கரையோரத்தில் இருக் கக்கூடிய தேசீய நெடுஞ்சாலை நீண்ட நாட்களாகப் பராமரிப்பு இல்லா நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே அதைப் பராமரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கிழக்குக் கடற்கரைச் சாலை பொறுத்து ஏற்கனவே மைய அரசுக்கு நாம் கடிதம் மூலமாகவும் நேரில் பேசியும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். அதற்காக 38 பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் 52.80 கோடி ரூபாய் அதற்காக செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. மணி : தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தில் கன்னியா குமரி-களியக் காவளை ரோடு மிகவும் பழுதடைந்து அதற்காக ரூ. 97 இலட்சம் 1980-81—ல் அனுமதிக்கப்பட்டும் இதுவரை அந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே அந்தப் பணியை ஆரம்பிப்பதற்காக அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அனுமதிக்கப்பட் டிருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தேசீய நெடுஞ்சாலையையொட்டி காட்பாடியில் உள்ள ரெயில்வே மேம்பாலத்தைச் சீர்படுத்த 1980—81-ல், 1981—82-ல் ரூ. 116 கோடி ஒதுக்கியிருந்தும் இன்று வரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதில் துரித நட வடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : முயற்சி எடுக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தேசீய நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் இந்த ஆண்டு புதிதாக ஏதாவது சாலைகள் எடுப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நெடுஞ்சாலை பராமரிப்பு பற்றியது.